2008 ஜனவரி 24]

41. The scheme for providing monthly assistance to unemployed youth has so far benefited 3,53,448 persons. Recognising the fact that only skill development can enhance the employability of these youth, this Government has been implementing a variety of training programmes for them. This Government will pay attention to improving their general knowledge, proficiency in computer and soft skills like spoken English and ability to face interviews. Taking into account the increasing need for trained heavy vehicle drivers, the Government will launch a massive programme for imparting training in heavy vehicle driving through the State Transport Undertakings.

42. In fulfillment of the promise made in the DMK manifesto, this Government had enhanced the monthly pension for the elderly, destitutes and widows from Rs.200/- to Rs.400/- during 2006-2007. Now the Government of India has launched the Indira Gandhi National Old Age Pension Scheme for all old aged persons below the poverty line. In our State, the Chief Minister launched this scheme on 19-11-2007, the birth anniversary of the former Prime Minister late Tmt.Indira Gandhi. Thanks to implementation of this scheme, about 10 lakh old aged persons above 65 years, living below the poverty line in our State will be benefited irrespective of whether they have support from male children or not.

43. During the previous year, this Government had increased the monthly assistance for disabled persons from Rs.200 to Rs.400 and from Rs.200 to Rs.500 in respect of severely disabled persons. In a gesture never done before, this Government had also sanctioned monthly assistance of Rs.500 for mentally challenged persons, who are not in a position to take care of themselves, without any restriction based on income limit or the number of beneficiaries. 30,000 such persons have benefited under this scheme so far. In addition, the Government has also taken necessary action to provide special education and vocational training to them.

44. This Government has always been concerned about the welfare of the transgenders, who have been shunned by the society and treated as a kind of handicapped. Recognising the various problems encountered by the transgenders, including that of social acceptance, this Government is implementing a number of beneficial measures like issue of ration cards and free surgeries in Government hospitals for them. As an expression of this Government's empathy towards the transgenders, a separate welfare board will be established for them.

2008 ஜனவரி 24]

உதவித் தொகையை ரூபாய் 200-லிருந்து ரூபாய் 500 ஆகவும் இந்த அரசு கடந்த ஆண்டு உயர்த்தியுள்ளது. தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ளக்கூட இயலாத மன வளர்ச்சி குன்றியோருக்கு, முன் எப்போதும் இல்லாத வகையில், வருமான வரம்பு மற்றும் எண்ணிக்கை வரையறையின்றி, மாதாந்திர உதவித் தொகையாக 500 ரூபாய் வழங்க இந்த அரசு ஆணையிட்டது. இதன் அடிப்படையில், இதுவரை 30,000 பேருக்கு இத்தொகை வழங்கப்பட்டுள்ளதோடு, இவர்களுக்கு சிறப்புக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி வசதிகளும் கிடைத்திட இந்த அரசு ஆவன செய்துள்ளது.

44. ஒரு வகையில் ஊனமுற்றோர் என்றே கருதப்பட்டு, சமுதாயத்தின் ஓரத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அரவாணிகளின் நலனில் எப்பொழுதுமே இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. சமூக அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை இவர்கள் எதிர்கொள்வதைக் கருத்தில் கொண்டு, குடும்ப அட்டைகளை வழங்குதல், அரசு மருத்துவமனைகளில் இலவச அறுவை சிகிச்சை அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இவர்களின்மீது இந்த அரசு கொண்டுள்ள பரிவின் காரணமாக இவர்களுக்கென புதிய நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்.

45. நமது மாநிலத்தில், ஏன் நமது நாட்டிலேயே, எங்கும் முன்னர் எப்போதும் வழங்கப்படாத அளவில், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த தாய்க்குலத்திற்கு திருமணம் மற்றும் மகப்பேறு உதவிகளை இந்த அரசு வழங்கி வருகிறது. இந்த உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கும்போது, அதில் குறுக்கே புகுந்து ஆதாயம் தேடும் நோக்கத்தோடு, சில இடைத்தரகர்களும் அலுவலர்களும் தவறான செயல்களில் ஈடுபட இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. இத்தகைய கயவர்கள்மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்.

46. அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நலனுக்கு இந்த அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வந்துள்ளது. 1996-2001 ஆண்டு காலத்தில், இந்த அரசுதான் அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்களை அமைத்து நலத் திட்ட உதவிகளை வழங்கியது. இடையில் கலைக்கப்பட்ட இந்த வாரியங்களை இந்த அரசு மீண்டும் அமைத்துள்ளது. இந்த வாரியங்களின்மூலமாக கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில், 2,20,043 அமைப்பு சாராத் தொழிலாளர்கள் சுமார் ரூபாய் 56 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத் திட்ட உதவிகளைப் பெற்றுள்ளனர்.